# போராட்டம் உருவாக்கிய ஒரு புத்திஜீவி

இத்தாலிய நாட்டின் புகழ் பெற்ற புரட்சிகர தத்துவஞானியும் ,புத்திஜீவியுமான அன்ரோனியொ கிறாம்சி, (Antonio Gramsci -1889-1937) அறிவுலகம் அதிகாரவர்க்கத்துடன் கைகோர்ப்பதைக் கண்டித்தவன். அதற்காகச் சிறைவாசத்தை அனுபவித்தவன்.

புத்திஜீவி பற்றி கூறிய கிறாம்சி- “ஒரு புரட்சிகரமான புத்திஜீவி அந்தப் போராட்டத்தின் உள் இருந்து உருவாக வேண்டும். வெளியில் இருந்து திணிக்கப்படக் கூடாது” என்று கூறினார்.

ஆங்கிலக் கல்வியின் விளைவுகளால் புத்தகப் படிப்பை புலமையாக ஏற்றுக்கொண்ட தமிழ்ச் சமுதாயம் ஒன்றில், யார் புத்திஜீவி என்பது பற்றிய மயக்கம் இன்னமும் பலரிடையே உள்ளது.

அவர்கள் தம் மனச் சிறையில் இருந்து வெளியேறும்வரை உண்மையான புத்தி ஜீவிகளை இனம் காணமாட்டார்கள்.

மனித வரலாற்றில் பெரும் மாற்றங்கள், பாய்ச்சல்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவற்றின் பின்னால் உள்ள ஆளுமைமிக்க, ஆற்றல்மிக்க மனிதர்களைச் சந்திக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம், சோர்வும், பயமும், துன்பநினைவுகளும் , ஆற்றாமையும், விதிவசம் என்னும் மனப்பான்மையும் கொண்டிருந்த மக்களை- அவர்களின் மனச்சிறையில் இருந்து விடுவித்து எம்மால் முடியும் என்ற போர்க்குணத்தை ஏற்படுத்தியது.

அண்மைய நிகழ்ச்சிகளால் மனம் ஒடிந்து வாழும் தமிழ்ச் சமுதாயம் இவை பற்றி சிந்தித்து, பேசி, செயல்படும் காலமிது.

கறுப்பு யூலை தமிழர்களை அவர் தம் தாயகம் நோக்கி ஓடவைத்தது. அவர்களில் பலர் பல நாடுகள் நோக்கி ஓடினார்கள்.

இன்று அவர்கள் தங்கள் தாயகத்தில் அவர்கள் வீடுகளில் இருந்து துரத்தப்பட்டு, வதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

“நாடிருந்தும்
நாடோடியாக
நாளெல்லாம்
நாடெல்லாம்
ஓடுகின்றேன்.
ஓடுவதற்கு உடல் வலு
தேவையில்லை.
மனவலு இருந்தால் மட்டும்
போதும்.
ஓடுவதற்கு கால் எனக்குத்
தேவையில்லை.
போதிய உளஉரம் வேண்டும்.
ஓடுவதால் மீண்டும் மீண்டும்
உறுதி பெறுகின்றேன்.
நாம் ஓடாமல் இருப்பதற்கு- ஓர்
சுதந்திர நிலம் அமைக்க
வேண்டும்.’’

என்று ...தனக்கே உரிய அழகான ஆளுமையுடன் கூறுகின்றார்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம், தங்கத்துரை, கிட்டு, திலீபன் எனப் பல புத்தி ஜீவிகளை உருவாக்கியுள்ளது. அவர்களில் கிட்டு என்ற புத்தி ஜீவி பற்றியே எனது பார்வை இடம் பெறுகிறது.

“கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.” எனகிறார் கிட்டுவை ஆட்கொண்ட தேசியத் தலைவர்.

“தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் உருவாக்கிய உண்மையான ஒரு தமிழ்ப் புத்தி ஜீவி கிட்டு” என்கிறார், அவரால் ஆட்கொள்ளப்பட்ட திரு.நடேசன் சத்தியேந்திரா.

அவ்வாறான கிட்டுவைப் பற்றி எமது பார்வையைத் திருப்பு முன்னர், புத்திஜீவி என்றால் யார்? புத்திஜீவியின் இலக்கணம் என்ன? பண்புகள் என்ன ? என்பவை பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

ஆங்கிலத்தில் Intellectual என்று கூறப்படும் சொல்லின் தமிழ் மொழிபெயர்ப்பே புத்திஜீவி என்னும் பதமாகும்.

ஆனால் ஆங்கிலச் சொல் உருவாவதற்கு முன்பே தமிழில் சான்றோன் என்ற பதம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கில் இருந்துள்ளது.

சங்ககாலப் புலவர்களைச் சான்றோர் என்றும், அவர்களின் பாடல்களை சான்றோர் இலக்கியங்கள் என்றும் அழைப்பர். சங்ககாலத்தின் பின் எழுந்த திருக்குறளும் சான்றோன் என்ற சொல்லையே பயன் படுத்தியுள்ளது.

“ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்’’ எனும் குறள் இதற்கு ஒரு உதாரணமாகும்.

ஆனால் சங்க இலக்கியங்கள் கூறும் சான்றோருக்கும், வள்ளுவர் காணும் சான்றோருக்கும் வேறுபாடுகள் உண்டு.

காதலையும் வீரத்தையும் பாடிய சங்கச் சான்றோர் சமுதாய மாற்றங்களின் கருவியாகச் செயல்பட, திருக்குறள் காட்டும் சான்றோர் கல்வி அறிவு மிக்கவர் என்ற அர்த்தத்தைப் பெறுகின்றனர்.

பின் வந்த பக்திநெறிக் காலத்தில் சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் போன்ற சமய குருவர் சான்றோராகப் போற்றப்படுகின்றனர்.

சமுதாய மாற்றங்கள் புத்திஜீவி பற்றிய வரைவிலக்கணத்தையும் காலத்துக்குக் காலம் மாற்றுவதைக் காண்கின்றோம்.

**ம.தனபாலசிங்கம்**
**அவுஸ்ரேலியா**

அந்தவகையில் நவீன அரசின் தோற்றத்தோடும், அந்த அரசுகளுக்கு உள்ளே காணப்படும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களுடனும் புத்திஜீவியின் பண்புகளும் மாற்றம் அடைவதைக் காண்கிறோம்.

"Intellectuals are to be considered as formulators of the nationalist ideology. Their task does not end here, however, since many of them also act as agitators and mobilizers of the nationalist movement.

It has to be added that not all intellectuals perform both functions.

In the case of a nation without a state of its own, its intellectuals' discourse is opposed by the state's intellectuals, some of whom will operate within the territory of the national minority defending the status quo, questioning its nationalist ideology and displaying a clear 'pro-state nationalist' attitude." Nations without States: Political Communities in a Global Age, by Montserrat Guiberna

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க புத்தி ஜீவிகளில் ஒருவரான எமர்சன் ( Ralph Waldo Emerson ) " The American Scholar " என்னும் புகழ்பெற்ற கட்டுரையில் புத்திஜீவி என்பவன் பூரண மனிதனைக் குறிக்கும் " ஒரு மனிதன் " என்கிறார்.

அந்த ஒரு மனிதனுள் பல ஆற்றல்களும், செயல்களும் ,வெளிப்படும் எனக் கூறும் எமர்சன் அந்த மனிதனை



உருவாக்குவதில், இயற்கை, புத்தகங்கள், செயல்கள் ( nature, books and action) என்பன ஆதிக்கம் செலுத்தும் எனவும், அவரின் செயல்பாடுகள் அவரது குணநலனின் வெளிப்பாடு என்றும், குணநலன் புத்தியைவிட உயர்வானது எனவும் கூறுகிறார்.

எமர்சன் கூறும் ஒரு மனிதனில் “விவசாயி, பேராசிரியர், பொறியியலாளர், சமயகுரு, அறிஞன், போர்வீரன், கலைஞன்” என்னும் பன்முக ஆற்றல்கள் புதைந்து கிடக்கும்.

இந்தப் புத்திஜீவி தன்காலத்தின் எல்லா ஆற்றல்களையும் கடந்த காலங்களின் அர்ப்பணிப்புகளையும் எதிர்காலத்தின் நம்பிக்கையையும் தன்னுள் சுமக்கின்றான் என்கிறார் எமர்சன்.

"The scholar is that man who must take up into himself all the ability of the time, all the contributions of the past, all the hopes of the future."

எமர்சன் கூறும் "ஒரு மனிதன்" பெண்களை உள்ளடக்கவில்லை என்ற குறைபாடு அவர்மேல் சிலரால் சுமத்தப்படுகிறது.

எமர்சன், கிறாம்சி போன்றோர் கூறும் வரைவிலக்கணங்களுக்கு இலக்கியமாக விளங்கக்கூடிய புத்திஜீவிகளை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் உருவாக்கியுள்ளது என்பதே எமது வாதமாகும்.

19 வயதிலேயே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட கிட்டு- சமாதான முன்னெடுப்புடன் உலகிற்கு தெரியப்படுத்திய நிலையில் ஐரோப்பாவில் இருந்து தன் மண்ணை நோக்கி கப்பலில் பிரயாணம் செய்தபோது- சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, பலவந்தமாக இந்திய கடற்பரப்புக்குள் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில், சரண் அடையாது வங்கக் கடலில் சங்கமமாகிய போது அவருக்கு வயது 31 மட்டுமே.

"On Wednesday 13 January 1993 the ship, M.V.Ahat was unlawfully intercept-edby the Indian Navy in international waters in the Indian Ocean.

The ship was intercepted about 290 miles east of Hambantota in the south of the island of Sri Lanka and about 440 miles south east of South India (Latitude 6 degrees North, Longitude 85 degrees East).

The boat was carrying Sathasivam Krishnakumar, (also known as Kittu), one time Deputy Leader of the Liberation Tigers of Tamil Eelam (and one of its founding members), and several other members of the LTTE.

The ship was then forced to travel towards the South Indian coast by Indian Navy frigates.... Nine survivors from the M.V.Ahat were arrested by the Indian Navy and lodged in solitary cells in a special wing of Vishakapatnam jail with maximum security.

They were charged with criminal conspiracy, shipment of explosives and threatening Navy officials under the TADA Act.

The TADA court judge, Mr.P. Lakshman Reddy, rejected the submissions of the Prosecution as well as the charge of carrying explosives against the crew, and held that the Navy and the investigating agencies, including the Central Bureau of Investigation and the Special Investigating Team, had failed to prove their charges against the crew of the MV Ahat.

The Judge said there was no case under the TADA Act against the accused as they were brought forcibly into the Indian waters and also there was no evidence of any offence.